**அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை**
INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

# 2021/2022

# தமிழ்

## ஆண்டு 9

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்**<br><br>**நாள்: 29.01.2022** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

**1 2 3 4**

1. வல்லின மெய்யெழுத்துகளின் தொகுதியாக அமைவது
   1. ங், ஞ், ண், ந்
   2. க், ச், ட், த்
   3. ய், ர், ல், வ்
   4. க், ச் ம், ன்

2. பெண்களுக்குரிய சிறப்பான ஊரகக்கலை
   1. கும்மி
   2. கோலாட்டம்
   3. கரகம்
   4. காவடி

3. பறம்பு என்ற மலைப்பகுதியை ஆண்ட மன்னன்
   1. செங்குட்டுவன்
   2. நெடுஞ்செழியன்
   3. குலோத்துங்கன்
   4. பாரி

4. அடவி என்பதன் ஒத்தபொருட்சொல்
   1. காடு
   2. வீடு
   3. நாடு
   4. உடு

5. முயலின் இளையது குட்டி போல மானின் இளையது
   1. குஞ்சு
   2. பிள்ளை
   3. குருளை
   4. கன்று

6. நானிலம் என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   1. நான் + நிலம்
   2. நான்கு + நிலம்
   3. நாலு + நிலம்
   4. நாள்+ நிலம்

7. சிலப்பதிகாரத்தில் அறத்தை நிலைநாட்டும் சான்றுப் பொருளாக அமைவது
   1. குண்டலம்
   2. வளையல்
   3. சிலம்பு
   4. மாலை

1 2 3 4

8. உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பது
   1. உடற்பயிற்சி செய்தல்
   2. செயற்கை வேதியற் பொருள்களைப் பயன்படுத்தல்
   3. மரங்களை வளர்த்தல்
   4. சுத்தம் பேணுதல்

9. நண்பர்கள் பொங்கல் உண்டனர். இச்சொல்லியத்தில் வந்துள்ள ஆகுபெயர்
   1. பொருளாகுபெயர்
   2. குணவாகுபெயர்
   3. தொழிலாகுபெயர்
   4. சினையாகுபெயர்

10. மன்னன் செங்குட்டுவன் சேரநாட்டில் சிலை அமைத்தது
   1. கண்ணகிக்கு
   2. மாதவிக்கு
   3. மணிமேகலைக்கு
   4. தமயந்திக்கு

11. விடாமுயற்சி உயர்வைத்தரும். உயர்வு என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. பள்ளம்
   2. தாழ்வு
   3. இறக்கம்
   4. குன்று

12. தம்பி நாள்தோறும் விளையாடுவான். இச்சொல்லியத்தில் வந்துள்ள இடைச்சொல்
   1. நாள்
   2. விளையாடுவான்
   3. தம்பி
   4. தோறும்

13. தமிழிலுள்ள தொன்மையான இலக்கண நூல்
   1. தொல்காப்பியம்
   2. வீரசோழியம்
   3. தண்டியலங்காரம்
   4. சதுரகராதி

14. ஓடி வந்த சிறுவன் நின்று கதைத்தான். இச்சொல்லியத்தில் வந்துள்ள பெயரெச்சம்
   1. ஓடி
   2. வந்த
   3. நின்று
   4. சிறுவன்

1 2 3 4

15. மரங்களை வெட்டாதீர்கள் - இச்சொல்லியத்தில் இடவேண்டிய நிறுத்தற்குறியீடு
    1. வினாக்குறி
    2. வியப்புக்குறி
    3. அடைப்புக்குறி
    4. காற்புள்ளி

16. பெருமை + ஆசிரியர் என்பதன் புணர்ச்சி வடிவம்
    1. பெருமையாசிரியர்
    2. பெரியவாசிரியர்
    3. பேராசிரியர்
    4. பெருவாசிரியர்

17. அண்ணா படிப்பில் கண்ணுங்கருத்துமாக இருப்பார். இச்சொல்லியத்தில் கண்ணுங்கருத்தும் என்பது
    1. இணைமொழி
    2. அடுக்குத்தொடர்
    3. இரட்டைக்கிளவி
    4. அடுக்கிடுக்குத்தொடர்

18. ஆந்தை அலறும் என்பது போல புறா
    1. கீச்சிடும்
    2. அகவும்
    3. குறுகுறுக்கும்
    4. கூவும்

19. அறிவுக்கடல் என்பது
    1. உருவக அணி
    2. உவமையணி
    3. உவமைத்தொடர்
    4. சொற்றொடர்

20. கண்டிப்பின்றி நடத்தல் என்ற பொருள் தரும் மரபுத்தொடர்
    1. கதை கட்டுதல்
    2. வாய் காட்டுதல்
    3. இடங்கொடுத்தல்
    4. தோள் கொடுத்தல்

21. வல்லின மெய்யெழுத்துகளின் இனவெழுத்துகள்
    1. உயிர் நெடில் எழுத்துகள்
    2. உயிர்க்குறில் எழுத்துகள்
    3. இடையின மெய்யெழுத்துகள்
    4. மெல்லின மெய்யெழுத்துகள்

1 2 3 4

22. முத்தமிழ்க் காப்பியம் என்று சிறப்பிக்கப்படுவது
    1. வளையாபதி
    2. மணிமேகலை
    3. குண்டலகேசி
    4. சிலப்பதிகாரம்

23. வல்லவனுக்குப் புல்லும்
    1. வெற்றி
    2. ஆயுதம்
    3. ஆக்கும்
    4. துணை

24. வினைச்சொற்களில் காலம் காட்டும் உறுப்பு
    1. பகுதி
    2. விகுதி
    3. இடைநிலை
    4. சந்தி

25. இலவுகாத்த கிளி போல என்ற உவமைத்தொடரின் பொருள்
    1. விரைவு
    2. ஏமாற்றம்
    3. பகை
    4. உலகறியாமை

25X1=25புள்ளிகள்

**2. கீழ்க்காணும் சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. அணுசக்தி:

______________________________

______________________________

2. விடாமுயற்சி:

______________________________

______________________________

3. பழந்தமிழர்:

______________________________

______________________________

4. தலைமுறை:

5. அரங்கேற்றம்:

(5X1=5 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் வினாக்களுள் நீங்கள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

1. ஆடலில் பயன்படுத்தப்படும் கைகளுக்கான குறியீடுகளாகிய எழிற்கை, தொழிற்கை என்பவற்றின் பொருளை எழுதுக.

2. நெகிழிகளின் பயன்பாட்டினால் ஏற்படும் தீங்குகள் இரண்டு எழுதுக.

3. சிலப்பதிகாரத்தின் எண்ணக்கருக்களுள் இரண்டினை எழுதுக.

4. சிலப்பதிகாரத்தில் அரங்கு பற்றிக் கூறப்பட்ட செய்திகளுள் இரண்டினை எழுதுக.

5. கண்டான் என்னும் பகுசொல்லில் வந்துள்ள பகுதி, விகுதி என்பவற்றை எழுதுக.

பகுதி: ______________________________

விகுதி: ______________________________

6. பிறை போலும் நெற்றி என்ற உவமையணியில் வந்துள்ள உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றை எழுதுக.

உவமானம்: ______________________________

உவமேயம்: ______________________________

பொதுத்தன்மை: ______________________________

7. உடம்படுமெய்யெழுத்துகளைத் தந்து, அவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

______________________________

______________________________

______________________________

(5X2=10 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் பாடலை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா? - எமக்
கின்பம் சேர்க்க மாட்டாயா? - நல்
அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ
அல்லல் நீக்க மாட்டாயா? - கண்ணே
அல்லல் நீக்க மாட்டாயா?

புறம் இதென்றும் நல் அகம் இதென்றுமே
புலவர் கண்ட நூலின் - தமிழ்ப்
புலவர் கண்ட நூலின் - நல்
திறமை காட்டி உனை ஈன்ற எம்முயிர்ச்
செல்வம் ஆக மாட்டாயா? - தமிழ்ச்
செல்வம் ஆக மாட்டாயா?

- பாரதிதாசன்

1. எப்போது யாழெடுத்து இன்பம் சேர்க்க வேண்டுமாம்?

_______________________________________________

2. அல்லல் நீக்குவதற்குச் செய்ய வேண்டியது யாதெனக் கூறப்பட்டுள்ளது?

_______________________________________________

3. தமிழ்ப் புலவர் கண்ட நூலின் திறமை யாது?

_______________________________________________

4. இப்பாடலில் கண்ணே என்று விளிக்கப்படுபவர் யார்?

_______________________________________________

(4X1=4 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் சொல்லியங்களை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

1. இன்றைய உலகில் கணினியின் பயன்பாடு அகத்தியமானதாகிவிட்டது.

_______________________________________________

2. தமிழர் வாழிட நாடுகளில் தமது பண்பாட்டைப் பேணுகின்றனர்.

_______________________________________________

3. இளமையில் கல்வி கற்க வேண்டியது எமது கடமை.

_______________________________________________

4. தமிழ்ப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை கொண்டுள்ளனர்.

_______________________________________________

_______________________________________________

5. உலகில் பல்வேறு இன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

_______________________________________________

6. தமிழர் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள்.

_______________________________________________

(6X1=6 புள்ளிகள்)

**6. கீழ்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. மாந்தரும் இயற்கையும்
2. தமிழர் கலைகள்
3. வாழிட நாட்டில் தமிழ்மொழி

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- தமிழ் மொழியின் சிறப்பு
- தமிழ்மொழிக்காகப் பணியாற்றும் நிறுவனங்கள்
- தமிழ்மொழிக்கல்வியில் இளையோர் செயற்பாடுகள் (15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

தெள்ளுதமிழில் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, உலக மக்களுக்கும் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிவகைகளை எடுத்துக் கூறியுள்ளார். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதன் மூலம் மக்கள் எல்லோரும் எந்த அடிப்படையிலும் உயர்வு தாழ்வு கருதாமல் வாழவேண்டும் என்கிறார். கல்வி, அறிவு, ஒழுக்கம் உடையவரே மனிதர் என்கிறார். அறிவுடையவர்கள் நல்லொழுக்கம் பேணி நடத்தலே அவர்கள் பெற்ற அறிவின் பயன் என்றும் கற்றலின் பயன் கற்றபடி நிற்றல் என்றும் கூறுகிறார். எனவே, கற்றல், ஐயமின்றிக் கற்றல், அதற்குத்தக நிற்றல் என்னும் மூன்று படிநிலைகளிலே கல்வி, அறிவு, ஒழுக்கம் என்பன மாந்த வாழ்வின் குறிக்கோள்களாக அடைய வழிகாட்டியுள்ளார். இவ்வுலகில் நாம் வாழும்போது கொலை, களவு, அழுக்காறு முதலிய தீயசெயல்களைச் செய்யாமல் நல்லவர்களாக வாழவேண்டும் என்கிறார். மக்கள் இவ்வுலகில் வாழ்வதற்குப் பொருள் தேடல் எவ்வளவு அகத்தியமோ அதேபோல், மறுமை வாழ்விற்கு அருள் தேடலும் அகத்தியம் என்கிறார்.

1. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதன் மூலம் எதனைக் கூறுகிறார்?

_______________________________________________

_______________________________________________

2. கல்வி தொடர்பாக வள்ளுவர் கூறும் மூன்று படிநிலைகளும் எவை?

_______________________________________________

_______________________________________________

3. மூன்று படிநிலைகளிலே மாந்தர் அடைய வேண்டிய குறிக்கோள்களாக எவற்றைக் கூறியுள்ளார்?

_______________________________________________

_______________________________________________

4. நாம் செய்யக்கூடாத தீயசெயல்கள் எவை?

_______________________________________________

_______________________________________________

5. அறிவுடையவர்கள் பெற்ற அறிவின் பயன் என்ன?

_______________________________________________

_______________________________________________

(5X2=10 புள்ளிகள்)

2. **கீழ்க்காணும் அழைப்பிதழை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

## அழைப்பிதழ்

**பின்லாந்து அன்னைபூபதி தமிழ்ப்பள்ளி**
**தொடக்கப்பிரிவு மாணவர்களின்**
**ஓவியக் கண்காட்சி - 2022**

**இடம்:** தமிழ்ப்பள்ளி மண்டபம்

**காலம்:** 2022 யனவரி 13, 14 மற்றும் 15ஆம் நாள்

**நேரம்:** காலை 9:00 தொடக்கம் மாலை 4:00 மணி வரை

**முதன்மை விருந்தினர்**
ஓவியர் புகழேந்தி

இக்கண்காட்சியைப் பார்வையிட வருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள்

1. இது ஓவியக் கண்காட்சிக்கான அழைப்பிதழ். ( )
2. இக்கண்காட்சி தொடக்கப்பிரிவு மாணவர்களுடையது. ( )
3. முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்பவர் ஒரு பேராசிரியர். ( )
4. கண்காட்சி மூன்று நாள்கள் நடைபெறும். ( )
5. கண்காட்சியை ஒழுங்குசெய்தவர்கள் பெற்றோர்கள். ( )

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 06 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |